**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனுசாமி | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பொன்னுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜ்ர.

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் சாம்ராஜ் கண்டிகை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இறந்த மங்கலா என்னுடைய மகள். ஆஜ்ர எதிரியை தெரியும். அவ்ர என்னுடைய மருமகன். என் மகள் டைல்ர வேலைக்கு சென்றா்ர அங்கு இறந்துவிட்டா்ர. எனக்கு எந்த விவரமும் தெரியாது. என் மகளை கொலை செய்தது யா்ர என்று தெரியாது. புகாரை நான் தான் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். புகாரை யா்ர எழுதினா்ர்கள் என்று தெரியாது. அதில் என்ன எழுதியது தெரியாது. எனக்கு எழுதபடிக்க தெரியாது.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

ஆர்.ஜே.கண்டிகையைச் சேர்ந்த தமிழ்மணி என்பவருக்கு 15 வருடங்களுக்கு முன்பு எனது மகள் மங்களாவை திருமணம் செய்துவைத்தேன் என்றும், அவர்களுக்கு 2 பையன்கள் என்றும், முதலாவது பையன் சரவணன் என் மகளுடன் வசித்துவருகிறார்

என்றும், இந்நிலையில் கணவனைவிட்டு 5 வருடங்களாக பிரிந்து எனது மகள் வாழ்ந்துவருகிறார் என்றும், மேலும், எனது மகளிடம் அவள் கள்ளத்தொடர்பு வைப்பதாக சந்தேகத்தின்பேரில் அடிக்கடி தகராறு தமிழ்மணி செய்துவந்தார் என்றும், இந்நிலையில் 27.12.2021 அன்று என் மகள் வழக்கம்போல் கடைக்குச் சென்றார் என்றும், நான் வயலில் வேலைசெய்துகொண்டிருந்தபோது காலை 9.45 மணிக்கு மோகனா என்பவர் என் மருமகன் என் மகளை அவள் கடைக்கு முன்பாக கத்தியால் என் மகளை கை, மார்பு, வயிறு ஆகிய இடங்களில் குத்திவிட்டு தப்பி சென்றுவிட்டதாகவும், என் மகள் இரத்த வெள்ளத்தில் இருப்பதாகக் கூறினார் என்றும், நான் எனது தம்பி மகன் ஐயப்பனை அழைத்துக்கொண்டு மகளது கடைக்குச் சென்றேன் என்றும், அதற்குள் 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மகளை சோளிங்கர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுவிட்டார்கள் என்றும், அன்று முதலுதவி சிகிச்சையளித்து அடுக்கம்பாறை அரசு மருத்துவனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்துச்செல்லும்போது வழியிலேயே பகல் 12.20 மணிக்கு என் மகள் இறந்துவிட்டாரென்றும், கொலை செய்த என் மருமகன்மீது நடவடிக்கை எடுக்கச்சொல்லி புகார் கொடுத்தேன் என்றும், சவக்கிடங்கில் இருந்த என் மகள் பிரேதத்தின்மீது விசாரணை மேற்கொண்டு பிரேதத்தை அடையாளம் காட்டினேன் என்றும், இதுசம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரி எனது மருமகன் என்பவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.01 18:35:28 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

# வாக்குமூலம்
## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | தமிழ்மணி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | 17 |

எதிரி ஆஜர்

சாட்சி இளவர் என்பதால் அவர் சாட்சி சொல்ல தகுதியான நபர்தானா என்று அறிந்துகொள்வதற்காக அவரிடம் கீழ்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டு அவரது பதில் பதிவு செய்யப்பட்டது.

நீதிமன்ற கேள்விகள்.

| | | |
|---|---|---|
| கேள்வி 1 | : | உன் பெயர் என்ன ? |
| பதில் | : | சரவணன் |
| கேள்வி 2 | : | இது எந்த இடம் |
| பதில் | : | நீதிமன்றம் |
| கேள்வி 3 | : | நீதிமன்றத்தில் நான் யார் |
| பதில் | : | நீதிபதி |
| கேள்வி 4 | : | இங்கு எதற்காக வந்திருக்கிறாய் |
| பதில் | : | சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் |
| கேள்வி 5 | : | இப்படித்தான் சொல்லவேண்டுமென்று யாராவது உன்னை கட்டாயப்படுத்தி இங்கே அழைத்து வந்தார்களா |
| பதில் | : | நானே தான் சொல்கிறேன். |

மேற்கண்ட நீதிமன்ற கேள்விகளுக்கு சாட்சிஅளித்த பதில்களை ஆராய்ந்து அதன் அடிப்படியில் அவர் சாட்சியமளிக்க தகுதியானவர் என்று

முடிவு செய்து அவரை தொடர்ந்து விசாரணை செய்ய உத்தரவிடப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ரூக்மணி புரத்தில் என் தாத்தாவுடன் வசித்து வருகிறேன். நான் திருத்தணி அரசு கலை கல்லுரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். ஆஜ்ர எதிரி என்னுடைய தந்தை. அ.சா.1 என்னுடைய தாத்தா. என்னுடைய அம்மாவை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். நான் பக்கத்து கடையில் நான் இருந்தேன். பக்கத்து கடையில் எனது அம்மா தையல் மிசன் வைத்து கடை நடத்தி வருகிறார். அது அய்யனேரி என்ற இடத்தில் உள்ளது. நான் அம்மா இறந்ததை நான் என் மாமாவிற்கு சொன்னேன். அவ்ர போன் எடுக்கவில்லை. எனது அம்மாவை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு போகும் வழியில் ஆம்புலன்ஸ் வந்ததால் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு சோளிங்க்ர அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என்னுடைய அம்மாவின் காயத்திற்கு தையல் போட்டார்கள். மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எந்த மருத்துவமனை என்று தெரியவில்லை. மேல் சிகிச்சைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

27.12.2021 காலை எனக்கு பள்ளி விடுமுறை என்பதால் என் அம்மாவுடன் கடைக்குச் சென்றேன் என்றும், எனது அம்மா கடையில் வேலை செய்துகொண்டிருந்தார் என்றும், எனது அம்மாவிடம் என் அப்பா அடிக்கடி குடித்துவிட்டு தாத்தாவிற்கு வந்து அம்மாவிடம் சண்டை போடுவார் என்றும், அதேபோல் 27.12.2021ம்தேதி காலை 9.30 மணிக்கு என் அப்பா, அம்மாவின் கடைக்கு வந்து பேசிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது எனது அம்மா, ஐயோ என்னை காப்பாற்றுங்கள் என்று கத்தினார் என்றும், நான் உடனே பக்கத்து கடையிலிருந்து ஓடி பார்த்தபோது எனது அம்மா நான்

பேசிக்கொண்டிருந்த கடைக்குவந்து கீழே இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தார் என்றும், அப்போது எனது அப்பா அம்மாவின் வயிற்றில் கத்தியால் குத்தினார் என்றும், இதைப்பார்த்து விக்னேஷ் அண்ணா பயந்து கடையிலிருந்து வெளியே சென்றுவிட்டார் என்றும், அந்த நேரத்தில் நான் எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டேன் என்றும், அப்பா வண்டியை எடுத்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டார் என்றும், எனது உறவினர்களுக்குத் தகவல் சொன்னேன் என்றும், எனது மாமா கார்த்திக் வந்ததும் என் அம்மாவை 108 ஆம்புலன்ஸ்மூலம் அழைத்துச்சென்றோம் என்றும், என் தாத்தா முனுசாமி சோளிங்கர் மருத்துவனை வந்தார் என்றும், அங்கிருந்து வேலூர் மருத்துவனை செல்லும்வழியில் என் அம்மா இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், நடந்ததைக் கூறிவிட்டு, எதிரி என் அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2025.09.01 18:35:36 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ஸ்ரீனிவாசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் சோளிங்கரில் வசித்து வருகிறேன். நான் முடி திருத்தும் கடை வைத்துள்ளேன். நான் தற்போது கோயமுத்துரில் உள்ள Tony and Guy என்ற கடையில் வேலை செய்து வருகிறேன். ஆ்ர.கே.பேட் அருகில் உள்ள அய்யனேரி என்ற இடத்தில் சொந்தமாக கடை வைத்துள்ளேன். 27.12.2021ம் தேதி கடையில் திறந்த போது பக்கத்து கடையிலிருந்து அ.சா.2 என் கடைக்கு வந்தா்ர. எனக்கு அப்போது சத்தம் கேட்டது. பக்கத்து கடையிலிருந்து ஒரு அம்மா காயத்துடன் சத்தம் போட்டு ஓடி வந்தா்ர. என் கடைக்கு உள்ளோ ஓடி வந்தா்ரகள். நான் பயந்து கொண்டு வெளியே சென்றேன். மற்றவ்ரகள் சொல்லி தான் தெரியும் அவரை குத்துவிட்டா்ரகள் என்று கூறினா்ரகள். வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

கடந்த 27.12.2021 காலை 8.00 மணிக்கு கடையில் இருந்தபோது பக்கத்து கடை நடத்திவரும் மங்களா என்பவரின் மகன் என் கடைக்கு வந்தார் என்றும், அப்பொழுது மங்களாவின் கடையில் தமிழ்மணி என்பவர் பேசிக்கொண்டிருந்தார் என்றும், சிறிது

நேரத்தில் சுமார் 9.30 மணிக்கு, காப்பாற்றுங்கள் என்று சத்தம் வந்தது அப்போது மங்களாவின் மார்பிலும் வயிற்றின்மீதும் கையாலும், கத்தியாலும் குத்திய இரத்த காயங்களுடன் கீழே விழுந்தார் என்றும், அப்போது தமிழ்மணி மீண்டும் மங்களாவின் வயிற்றில் கத்தியால் குத்தினார் என்றும், நான் பயந்து வெளியே ஓடிவிட்டேன் என்றும், அப்போது அவருடைய மகன் தமிழ்மணியை தடுத்து கீழே தள்ளினார் என்றும், தமிழ்மணியை பிடிக்கும்போது அவர் தள்ளிவிட்டு ஓடிவிட்டார் என்றும், உடனே மங்களாவை மீட்டு 108 ஆம்புலன்சில் கொண்டுசென்று மருத்துவனையில் சேர்த்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன் என்று கூறிவீட்டு, தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.01 18:35:43 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ருத்ரவேல் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பழனி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜ்ர.

<u>**முதல் விசாரணை**</u> **:**

என்னுடைய சொந்த ஊர் குடியாத்தம் அருணாச்சல நக்ர ஆகும். தற்போது நான் வேலுர் மாவட்டம் குடியாத்தம் வட்டம், மேல்ஆலத்துர் வருவாய் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 27.12.2021ம் தேதி காலை 9 மணி அளிவில் அய்யனேரி கிராமத்தில் உள்ள அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது என்னுடைய கிராம உதவியாள்ர 9.30 மணிக்கு ஊரில் பிரச்சனை என ஊர் மக்கள் கூடியுள்ளதாக எனக்கு தகவல் கொடுத்தார். அய்யனேரி மேற்கு சாப்பிங்க் காம்பிலக்ஸ் அருகில் நானும், எனது கிராம உதவியாளரும் விசாரணை செய்த போது திருமதி மங்களா என்பவ்ர காயங்களுடன் அரசு மருத்துவமனை அழைத்து சென்றுள்ளதாக தகவல் கிடைத்து. அந்த விபரத்தை வருவாய் ஆய்வாளரிடம் தெரிவித்தேன். அன்றைய தினம் மதியம் 2.00 மணி அளவில் ஆர்.கே.பேட் காவல் நிலைய போலிசார் சம்பவ இடத்தில் வந்தன்ர. ரத்தம் இருந்த மேட்டும், ரத்தம் இல்லாத மேட்டும் எடுத்தார்கள். மேற்படி இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜ்ர தயார் செய்தார்கள். மேலும் வரை ப்படம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜ்ர **அ.த.சா.ஆ.2** ஆகும். கைப்பற்றுதல் மகஜ்ர **அ.த.சா.ஆ.3** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் மேல் சொன்ன கையெழுத்துக்கள் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரிதான். நான் அந்த பகுதி வி.ஏ.ஓ என்பதால் போலிசா்ர கேட்டுக்கொண்டதற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2025.09.01 18:35:50 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்தி என்கிற கார்த்திகேயன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | நரசிம்மன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜ்ர.

**<u>எதிர் முதல் விசாரணை</u> :**

நான் ரூக்மணி புரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்ரல் வாட்ட்ர கமிசன் என்ற மத்திய அரசு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் சுப்பரைசராக வேலை செய்து வருகிறேன். 27.12.2021ம் தேதி நான் வேலையில் இருந்த போது என்னுடைய நண்ப்ர அருண் என்பவ்ர மருத்துவமனைக்கு அழைத்தார். நான் சோளிங்க்ர அரசு மருத்துவமணைக்கு சென்றேன். என்னுடைய சின்ன மாமியார் மங்களா இறந்துவிட்டதால் அது சம்மந்தமாக போலிசார் என்னை மருத்துவமணையில் வைத்து பிரேத விசாரணை சம்மந்தமாக விசாரித்தார்கள். அந்த விசாரணையில் நான் கையெழுத்து போட்டேன். அவ்ர எப்படி இறந்தார் என்ற விபரம் தெரியாது.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

என் சித்தியின் மகளான மங்களாவிற்கும், தமிழ்மணிக்கும் திருமணம் நடந்தது என்றும், மங்களாவின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு தமிழ்மணி அடிக்கடி அவரிடம்

சண்டைபோடுவார் என்றும், இதனால் மங்களா 5 வருடங்களாக அவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்துவருகிறார் என்றும், 5 ஆண்டுகளாக அய்யனேரியில் டெய்லர் கடை வைத்து தொழில் செய்துவருகிறார் என்றும், இந்நிலையில் 27.12.2021 அன்று அவர் மகனுடன் கடைக்குச் சென்றார் என்றும், அப்பொழுது தமிழ்மணி கடையருகே வந்து மங்களாவிடம் சண்டை போட்டு கத்தியால் குத்தியதில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாக கடையிலிருந்து அவரது மகன் சரவணன் கூறினார் என்றும், அப்பொழுது நான் வண்டியை எடுத்துக்கொண்டு அங்கே சென்றேன் என்றும், சித்தி மகள் மங்களா இரத்த காயங்களுடன் பக்கத்துக் கடையில் இரத்த வெள்ளத்தில் இருந்தார் என்றும், அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ்மூலம் சோளிங்கர் மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், அப்போது அவருடைய அப்பா முனுசாமி வந்து மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவனைக்கு அழைத்துச்செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாக அவரது அப்பா முனுசாமி இது சம்பந்தமாக ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் பிரேத விசாரணைக்காக என்னை விசாரணை செய்தார்கள் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது நடந்ததைக் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.01 18:35:56 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 6 |
| நாள் | : | 01.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நரசிம்மன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சுப்பாரெட்டி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜ்ர.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது ரூக்மணிபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இறந்த மங்களம் எனது சித்தப்பா மகள் ஆவா்ர. 27.12.2021ம் தேதி மங்களத்தின் உடலை வாங்குவதற்கு சோளிங்க்ர அரசு மருத்துவமணைக்கு என்னை அழைத்தார்கள். பிரேதத்தை வாங்குவதற்குகாக போலிசா்ர கையெழுத்து கேட்டா்ர்கள். நான் கையெழுத்து போட்டேன்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

எனது உறவுமுறை அக்காவான மங்களாவிற்கும், தமிழ்மணிக்கும் திருமணம் நடந்தது என்றும், மங்களாவின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு தமிழ்மணி அடிக்கடி அவரிடம் சண்டைபோடுவார் என்றும், இதனால் மங்களா 5 வருடங்களாக அவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்துவருகிறார் என்றும், 5 ஆண்டுகளாக அய்யனேரியில் டெய்லர் கடை வைத்து தொழில் செய்துவருகிறார் என்றும், இந்நிலையில் 27.12.2021 அன்று அவர்

மகனுடன் கடைக்குச் சென்றார் என்றும், அப்பொழுது தமிழ்மணி கடையருகே வந்து மங்களாவிடம் சண்டை போட்டு கத்தியால் குத்தியதில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாக கடையிலிருந்து அவரது மகன் சரவணன் கூறினார் என்றும், நான் கேள்விப்பட்டு சோளிங்கர் அரசு மருத்துவமனைக்குச் சென்றேன் என்றும், அப்போது சோளிங்கர் அரசு மருத்துவமனையிலிருந்து அவருடைய அப்பா முனுசாமி வந்து மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவனைக்கு அழைத்துச்செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாக இது சம்பந்தமாக ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், நான் மருத்துவனையில் இருந்தபோது போலீசார் பிரேத விசாரணைக்காக என்னை விசாரணை செய்தார்கள் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது நடந்ததைக் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.01 18:36:04 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.